

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.2.2025) சென்னை ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற விழாவில், பெருநகர சென்னை மாநகராட்சிப்பள்ளிகளில் மாணவிகளுக்கு தையல் பயிற்சி வழங்குவதற்காக தையல் இயந்திரங்களை வழங்கினார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன். டாக்டர் கலாநிதி வீராசாமி, டாக்டர்.கனிமொழி சோமு, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.டி.ஜி.வினய், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.2.2025) சென்னை ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற விழாவில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியில் ஈடுபடுத்துவதற்காக பாப்காட் வாகனங்கள் (மினி ஜேசிபி), நாய் பிடிக்கும் வாகனங்கள், மினி டிரக் வாகனங்கள் என ரூ.13.35 கோடி மதிப்பிலான 58 வாகனங்களை கொடியசைத்து வழியனுப்பி வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கலாநிதி வீராசாமி, டாக்டர்.கனிமொழி சோமு, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், ஜோசப் சாமுவேல், அ.வெற்றி அழகன், துணை மேயர் மு.மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.டி.ஜி.வினய், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத்தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக தமிழ்நாடு திகழ்வது போல்

# இந்தியாவிலேயே முன்மாதிரி மாநகராட்சியாக நம் சென்னை மாநகராட்சி திகழ்கிறது!

## சென்னையில் ரூ.1,893 கோடி மதிப்பிலான திட்ட தொடக்கவிழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

சென்னை,பிப்.19 -

**சென்னை, மாநகராட்சிக் கட்டடத்தில் உள்ள அரங்கில், தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஏற்பாட்டிலான நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு ரூ.1893 கோடி மதிப்பிலான திட்டங்களை நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார். அப்போது அவர் 28 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்ததுடன், 87 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 58 புதிய வாகனங்களின் பயன்பாட்டைத் தொடங்கி வைத்தார். இதைத் தொடர்ந்து, சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவ - மாணவியருக்கான நலத்திட்ட உதவிகள் மற்றும் கருணை அடிப்படையிலான பணி நியமனக் கடிதங்களை, இந்த நிகழ்ச்சியின் போது வழங்கினார். நலத்திட்ட உதவிகளைப் பெற்றவர்களை வாழ்த்திச் சிறப்புரையாற்றினார்.**

**அவர் ஆற்றிய சிறப்புரையின் விவரம் வருமாறு:**

பெருநகரச் சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் சார்பாக, 1,893 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, புதிய வாகனங்களைப் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். அதுமட்டுமல்லாமல், சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள், கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்குவதிலும் கூடுதல் மகிழ்ச்சி அடைகிறேன்.

### சென்னையின் மீது கலைஞர் பாசம்!

கடந்த 50 ஆண்டுகளில் சென்னை அடைந்துள்ள வளர்ச்சியை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. சென்னை அந்த அளவிற்கு மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்து இருக்கிறது. வளர்ச்சி அடைந்த சென்னையின் வரலாற்றை, கழக அரசின் பங்களிப்பை தவிர்த்துவிட்டு நாம் எழுத முடியாது.

சென்னை மாநகராட்சியின் மீது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு எந்த அளவு பாசமும், நெருக்கமும் இருந்தது என்பதற்கு, ஒரு சம்பவத்தை இங்கே நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களிடம், பத்திரிகையாளர்கள் கேள்வி கேட்டார்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையிலேயே பெற்ற பரிசுகளில் எதைப் பெருமையாகக் கருதி மகிழ்வீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு கலைஞர் அவர்கள் சொன்ன பதில், ``1959-இல் சென்னை மாநகராட்சித் தேர்தலில் கழகம் எப்படியும் வெற்றி பெறும் என்று பேரறிஞர் அண்ணாவிடம் வாக்குறுதி அளித்து, அந்த வெற்றியையும் பெற்று முதன்முதலில் தி.மு.க மேயர் பதவிக்கு வந்து பணியாற்றியதற்காக, சென்னை மெரினா கடற்கரையில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்னை பாராட்டி ஒரு மோதிரம் அளித்தார். அந்தப் பரிசை இப்போது நினைத்தாலும் மகிழ்ச்சியில் எனக்கு கண்ணீர் வரும். அந்த கூட்டத்தில் அண்ணா என்னை பாராட்டி பேசியதை என் வாழ்நாள் முழுக்க மறக்க மாட்டேன்" என்று கலைஞர் உணர்வுப்பூர்வமாக சொல்லி இருந்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.2.2025) சென்னை ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற விழாவில், பெருநகர சென்னை மாநகராட்சியில் ரூ.17.95 கோடி மதிப்பில் முடிவுற்ற 15 திட்டப்பணிகள் மற்றும் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் ரூ.431.49 கோடி மதிப்பில் முடிவுற்ற 13 திட்டப்பணிகளை திறந்து வைத்து, ரூ.1428.89 கோடி மதிப்பில் 87 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், திருமதி.தமிழச்சி தங்கபாண்டியன், டாக்டர் கலாநிதி வீராசாமி, டாக்டர் கனிமொழி சோமு, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு. மகேஷ் குமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.டி.ஜி.வினய், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### சென்னை வளர்ச்சிக்கு தனிக்கவனம்!

அந்த அளவிற்கு கலைஞரின் பொது வாழ்வில் சென்னை மாநகராட்சிக்கு என்று ஒரு தனி இடம் உண்டு. அதனால் தான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன் ஆட்சிக் காலத்தில் சென்னையின் கட்டமைப்பை மேம்படுத்த ஏராளமான திட்டங்களை செயல்படுத்தினார்கள். நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சியின் மேயராகப் பணியாற்றியபோதுதான் 'சிங்காரச் சென்னை' திட்டத்தைச் செயல்படுத்தினார். அதன்மூலம் சென்னை மாநகராட்சியை உலகெங்கும் உள்ள மாநகராட்சிகளுக்கு இணையாக வளர்த்தெடுத்தார்.

இன்றைக்கு சென்னையில் இருக்கின்ற பல்வேறு மேம்பாலங்கள், மெட்ரோ இரயில் திட்டம், போக்குவரத்துக் கட்டமைப்பு, குடிநீர்த் திட்டங்கள் இவை எல்லாமே நம் முதலமைச்சர் அவர்கள், சென்னை மேயராக இருந்தபோது செயல்படுத்தப்பட்டவை. அன்றைக்கு மேயராக சென்னை எப்படி எல்லாம் உயரவேண்டும் என்று நினைத்தாரோ, திட்டங்களைத் தந்தாரோ, அதே உணர்வோடுதான் இன்றைக்கும் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையின் வளர்ச்சிக்கு தனி கவனம் செலுத்தி வருகிறார்.

### மாநிலங்களுக்கும் வழிகாட்டி

சென்னையின் வளர்ச்சி சீராக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் `வட சென்னை வளர்ச்சித் திட்டம்' என்ற மகத்தான திட்டத்தை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கிறார். நம் திராவிட மாடல் அரசின் திட்டங்களால் தமிழ்நாடு எப்படி இந்திய ஒன்றியங்களிலேயே அனைத்து மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருக்கிறதோ, அதேபோல் இந்திய மாநகராட்சிகள் அனைத்திற்கும், நம் சென்னை மாநகராட்சி ஒரு முன்மாதிரி மாநகராட்சியாக திகழ்ந்துகொண்டு இருக்கிறது.

அந்த வகையில்தான் 'சிங்காரச் சென்னை 2.0', 'நமக்கு நாமே' திட்டங்கள் மூலமாக இன்றைக்கு மட்டும் சுமார் 2 ஆயிரம் கோடி அளவிற்கான திட்டங்களை இந்த விழாவின் மூலம் செயல்படுத்தி இருக்கிறோம். பள்ளிக் கட்டடங்கள், விளையாட்டுத் திடல்கள், பூங்காக்கள், கழிவுநீர்ப் பாதைகள், குடிநீர்த் தேக்கத் தொட்டிகள், மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை, கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் இப்படி ஏராளமான திட்டங்களை இன்றைக்கு தந்து இருக்கிறோம்.

### அன்பால் வென்ற தலைவர்!

இங்கே நிறைய பள்ளி மாணவர்கள் வருகை தந்துள்ளீர்கள். நம் முதலமைச்சர் அவர்கள் மாணவர்களின் கல்விக்கு எப்படி எல்லாம் துணை நிற்க முடியும் என்பதற்கான திட்டங்களை நான்கு ஆண்டுகளில் தொடர்ச்சியாகச் செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சரின் காலை உணவு திட்டமாக இருந்தாலும் சரி, அரசு பள்ளியில் படித்து உயர் கல்வி சேர்கின்ற பெண் குழந்தைகளுக்கு புதுமைப்பெண் திட்டம் மூலம் மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகையாக இருந்தாலும் சரி, மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற தமிழ்ப்புதல்வன் திட்டமாக இருந்தாலும் சரி இப்படி பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் மாணவச் செல்வங்கள் உங்களுக்காக செயல்படுத்தி இருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல், நான் முதல்வன் திட்டம், இல்லம் தேடி கல்வி, வானவில் மன்றம், எண்ணும் எழுத்தும், கலை இலக்கிய போட்டிகள் இப்படி இந்தியாவிலேயே கல்விக்கு என்று, மாணவர்களுக்கு திட்டங்களை தருகின்ற ஒரே முதலமைச்சர் நம் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள்தான். அதனால் தான் நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் எந்த பகுதிக்கு சென்றாலும் அங்குள்ள மாணவ, மாணவிகள் மிகுந்த அன்போடு நம் முதலமைச்சர் அவர்களை `அப்பா', `அப்பா' என்று உரிமையோடு அழைக்கிறார்கள்.

### உத்வேகம் பிறக்கிறது

அதைப்பற்றி நம் முதலமைச்சர் அவர்கள்கூட நேற்று முன்தினம் கூறி இருக்கிறார். தமிழ்நாட்டு மாணவர்கள் என்னை `அப்பா', `அப்பா' என்று சொல்லச் சொல்ல எனக்கு இன்னும் பொறுப்பு அதிகமாக கூடிக்கொண்டே போகிறது. இன்னும் அவர்களுக்கு நிறையத் திட்டங்களை தர வேண்டும் என்ற உத்வேகம் உருவாகி இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்.

ஆகவே, தந்தையாக இருந்து உங்களுக்கான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து செயல்படுத்துவார். உங்கள் வீட்டில் உள்ள ஒரு அண்ணணாக நானும் உங்களுக்கு துணை நிற்பேன்.

இந்த இனிய விழாவில் உங்களை எல்லாம் சந்தித்ததில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்னை மாநகராட்சியின் அடுத்தக் கட்ட வளர்ச்சிக்கு இன்னும் அதிகமான திட்டங்களை நம் அரசு தொடர்ந்து செயல்படுத்திக்கொண்டே இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் உறுதியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அமைச்சர் அண்ணன் கே.என்.நேரு அவர்களுக்கும், துறையின் அதிகாரிகள், அலுவலர்கள் அத்தனைப்பேருக்கும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே. சேகர்பாபு, மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், தமிழச்சி தங்கபாண்டியன், கலாநிதி வீராசாமி, மருத்துவர் கனிமொழி என்.வி. என்.சோமு, சென்னை மாநகர மேயர் பிரியா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.கார்த்திகேயன் ஐ.ஏ.எஸ்., துணை மேயர் மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., சட்டமன்ற உறுப்பினர்கள் பரந்தாமன், ஆர்.டி.சேகர், தாயகம் கவி, மாதவரம் சுதர்சனம், அரவிந்த் ரமேஷ், ஜோசப் சாமுவேல், கே.பி.சங்கர், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, காரப்பாக்கம் கணபதி, எபினேசர், பிரபாகர் ராஜா, வெற்றியழகன், அசன் மவுலானா, மாநகராட்சி குடிநீர் வழங்கல் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வினய், மாநகராட்சியின் ஆளுங்கட்சித் தலைவர் ராமலிங்கம், மண்டலக்குழுத் தலைவர் மதன் மோகன், மாமன்ற உறுப்பினர் காமராஜ், உள்பட மாமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், அலுவலர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.